**தலைப்பு 256 - கம்பஹா மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

கம்பஹா மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கம்பஹாமாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021யூன்16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021யூன்14ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

கம்பஹா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள்2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்றஅபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேந்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 பொறுப்புக்கள் மற்றும் இணக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செலவின மதிப்பீட்டுக்கு மேலதிகமாக நிதிப்பிரமாணம் 66 வீரமொன் நடைமுறையின் கீழ் மேலதிக ஒதுக்கீடுகள் சேர்த்துக் கொண்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 94(1) முரணாக இரண்டு மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கீட்டு செலவினங்களையும் மீறி ரூபா 144,244 க்கான பொறுப்புக்களுக்கான இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. | 2020 வருடத்தினுள் இடைக்கால நிறைவேற்று கணக்குகள் 04 நிறைவேற்றப்பட்டமையினால் ஒதுக்கீடு மற்றும் செலவின கட்டுப்பாடுகளினை உச்ச கட்டத்தில் பேணப்பட்டு வந்தன. | ஒதுக்கீடுகளை மீறி பொறுப்புக்களுக்கான இணக்கப் பாட்டினை மேற்கொள்ளப் படாமை. |

## 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பெற்றுக் கொடுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை பாவனை செய்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஓய்வூதியத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டிலிருந்து பெற்று வந்த கம்பஹா மாவட்டத்தில் உள்ள 13 பிரதேச செயலகங்களின் 72 ஓய்வூதியம் பெறுநர்களின் இறப்பினை தாமதமாக அறியத் தந்ததின் காரணமாக அவர்களின் இறப்புக்களுக்குப் பின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உள்ளவாறாக ரூபா 9,539,450 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த மேலதிக செலுத்தலுக்கான தொடர் செயற்பாட்டின் சம்பந்தமாக செயற்பாட்டு நடவடிக்கை மேற்கொள்வது ஓய்வூதிய அதிபதியின் பொறுப்பாகும். எவ்வாறாயினும், சென்ற 10 ஆண்டுகளினுள் எனது மேற்பார்வையின் கீழ் பிரதான கணக்காளரின் வழிநடத்தலில் பிரதேச செயலாளர்களுக்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த தொகையில் கணிசமான அளவினை அறவிடப்பட்டுள்ள தென்பதனை அறியத் தருகின்றேன். | பிரதேச செயலாளரின் நேரடி மேற்பார்வை யினை இது தொடர்பாக செலுத்த வேண்டியதுடன் மேலதிக செலுத்தலினை மீள் அறவிடுவதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டியமை. |

## 2.3 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவைகளுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே ஒப்பீடு செய்யப்படுகின்றன.

| | சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 யூலை 03 ஆந் திகதிய இலக்கம் 130/09/14/8 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கை | களணி பிரதேச செயலகப் பிரிவில் இரண்டு கிராம சேவை உத்தியோகத்தர்கள் சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களை பெற்றுக் கொண்டிருந்த போதிலும் 60 வதத்திற்கு முன் ஓய்வு பெற்றுச் சென்றதன் காரணமாக சுற்றறிக்கை ஆலோசனைப் படி அவர்களிடமிருந்து ரூபா 283,420 அறவிடப்பட | அறவிடப்பட வேண்டிய மோட்டார் சைக்கிள்களுக்கான தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வேன். | அறவிடப்பட வேண்டிய தொகையினை சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக தாமதமின்றி அறவிடப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டியிருந்த போதிலும் 03 வருடங்கள் மேலாகியும் அத் தொகையினை அறவிட முடியாது போய் இருந்தது. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை ஐஐ ஆம் பந்தியின் 13(3) ஆம் பிரிவு | பதில் கடமையாற்றுவதற்கான நியமனம் மேற்கொள்ளப்பட வேண்டியது, நிரந்தர நியமனத்தினை மேற்கொள்ளப்படும் வரையில் தற்காலிக மாற்று வழியாக இருந்த போதிலும் திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் 13 கிராம சேவை உத்தியோகத்தர்கள் 09 மாதம் முதல் 44 மாதம் வரையில் பதிலல் கடமையாற்றி உள்ளனர். | 13 கிராம சேவகர் பிரிவில் வெற்றிடங்கள் நிலவியதனால் சம்பந்தப்பட்ட 13 பிரிவுகளுக்காக பதில் கடமையாற்றும் நியமனம் மேற்கொள்வதற்கு நேர்ந்தமையினை அறியத் தருகின்றேன். | பதில் கடமையாற்றும் பதவிகளுக்காக தாமதமின்றி நிரந்தர நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் | | | |
| (ஐ) | நிதிப்பிரமாணம் 1647(உ) | நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்கள் பற்றிய வாகன இலக்கம், செஸ்தி இலக்கம், என்ஜின் இலக்கம், குதிரை சக்தி எரிபொருள் வகை, வாகன சேர்ந்த வகை, மொடல் கொள்வனவு செய்யப்பட்ட திகதி செலுத்தப்பட்ட தொகை, செலுத்தப்பட்ட திகதி, காப்புறுதிப் பத்திரம் ஆகிய விபரங்கள் உட்படுத்தப்பட்ட முறையான அட்டவணை பேணப்பட வேண்டும். | கணக்காய்வினால் காட்டப்பட்டுள்ள விடயங்களின் படி சம்பந்தப்பட்ட அட்டவணையினை தயாரிப்பதற்கான ஒழுங்கினை மேற்கொள்ளும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 1647(உ) பிரகாரம் வாகனங்களின் தகவல்களை உள்ளடக்கப்பட்ட அட்டவணையினை பேணப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | நிதிப்பிரமாணம் 1647(ஊ) | வாகனங்களின் தகவல்கள்ள உள்ளடக்கப்பட்ட அட்டவணையினை தொடர்ந்து பேணப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட அட்டவணையினை தயாரிக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 1647(ஊ) பிரகாரம் சம்பந்தப்பட்ட அட்டவணையினை பேணப்படுதல். |
| (ஈ) | 2011 மார்ச் 30 ஆந் திகதிய 1/2021 கொண்ட ஓய்வூதியச் சுற்றறிக்கை | திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்தினால் ஓய்வூதிய கட்டுப்பாட்டு கணக்கொன்றினை தயாரிக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மூலம் காட்டப்பட்டுள்ள விடயங்களின் படி சம்பந்தப்பட்ட அட்டவணையினை தயாரிப்பதற்கான ஏற்பாட்டினை மேற்கொள்ளும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. | 2011 மார்ச் 30 ஆந் திகதிய 1/2011 கொண்ட ஓய்வூதிய சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டியமை. |

## 2.4 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் முறையான அங்கீகாரம் இன்றி கீழுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செலவின விடய இலக்கம் 256-1-2-0-1001 கீழ் கணக்கிலிடப்பட்டுள்ள ரூபா 3,200,000 மற்றும் ரூபா 500,000 நாட்குறிப்பேட்டின் மூலம் முறையே 256-1-2-0-1003 மற்றும் 256-1-1-0-1001 செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டு இருந்த போதிலும் அதற்கு முறையான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2020 வருடத்தினுள் இடைக்கால கணக்குகளின் கீழ் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டு குறைபாடு மற்றும் மிகையினை சீராக்குவதற்காக தனிநபர் சம்பளங்களுக்கிடையே மாற்றுவதற்கு வாய்ப்பு இருந்தமை. | மாற்றுவதற்காக முறையான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள வேண்டியமை |

## 2.5 மோசடி தன்மையானகொடுக்கல் வாங்கல்கள்

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட மோசடி தோற்றத்திலான கொடுக்கல் வாங்கல்கள் கீழ் உள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மகர பிரதேச செயலகத்தில் 2014 யூலை 15 ஆந் திகதி நடந்த இருப்பு பீரோவில் வைக்கப்பட்டிருந்த பணம் | 2021 மே இரண்டாம் திகதி, பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பரீட்சிப்பு அறிக்கை தொடர்பாக உள்நாட்டு | அறவிடப் படுவதனை துரிதமான மேற்கொள்ளப்பட |

மாயமானது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(1)(ஆ) பிரகாரம் நடாத்தப்பட்ட இறுதி அறிக்கையின் படி இப்பணத் தொகை காணாமற் போனது தொடர்பாக பிரதேச செயலாளர் கணக்காளர், நிதி உதவியாளர், மற்றும் சிறாப்பர் ஆகிய அதிகாரிகளின் குறைபாடுகள், கவனக் குறைவு மற்றும் அவதானமின்மை ஆகியன இதற்கு காரணிகளாக இருந்தமையினால் இதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பினை இவ் அதிகாரிகள் நால்வர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டுமென பரீட்சிப்பு குழுவினால் முன்மொழிதல் முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020 செப்தெம்பர் 22 ஆந் திகதிய கடிதத்தில் அவ் அறவிடலுக்கான பரிந்துரை மற்றும் அங்கீகாரத்தினை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் சம்பந்தப்பட்ட அறவிடலினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கையில் கம்பஹா மாவட்ட செயலாளரின் 2020 ஒக்தோபர் 05 ஆந் திகதிய மாற்றம் என்னும் விடயத்தினை அடிப்படையாகக் கொண்டு திரும்ப மீளாய்வு பரீட்சிப்பு மேற்கொண்டு அறிக்கையொன்று கோரப்பட்டிருந்தது. அவ்வாறு அறிக்கையொன்று கோரப்பட்டதன் தேவைப்பாடு என்ன என்பதற்கான விளக்கம் அளிக்கப்பட்டிருக்கவில்லை. நிதி உதவியாளர் மற்றும் சிறாப்பர் ஆகிய அதிகாரிகளுக்கு நிதிப் பிரமாணத்தின் படி காப்பீடு செய்வதற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த உத்தரவில் இதுவரை எவ்வித திருத்தமும் மேன்முறையீட்டின் படி பெற்றுக் கொடுக்கப்படாதிருக்கையில் சம்பந்தப்பட்ட அறவிடலினை துரிதமாக அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அலுவலக இராஜாங்க அமைச்சின் செயலாளரை அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி அவரின் ஆலோசனைக்கமைவாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

வேண்டியமை.

## 2.6 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச உத்தியோகத்தர்களின் முற்பண ஒப்பீட்டு கூற்றின் படி இறந்துபோன, ஓய்வுபெற்றுச் சென்ற, வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட மற்றும் வேலையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உள்ளவாறு நிலுவையாக உள்ள அறவிடப்பட வேண்டிய மீதிகளின் முழுத்தொகை ரூபா 4,236,665 ஆக இருந்தது. அந்த நிலுவை மீதி 01 வருடம் முதல் கொண்டு 05 வருடங்களுக்கு மேலான கால வீச்சில் தொடருகின்ற போதிலும் அம்மீதிகளை அறவிடப்படுவதற்கான பின் விசாரிப்பு செயற்பாடுகள் மந்த நிலையில் உள்ளன. | அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளில் ரூபா 4,236,665 இறந்து போன, ஓய்வு பெற்றுச் சென்ற, சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட மற்றும் வேலையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களினது என்பதனை ஏற்றுக் கொள்வதுடன் அக்கடன் மீதிகளை அறவிடுவது தொடர்பாக பிரதேச செயலகங்களுக்கு அடிக்கடி ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. | அறவிடப்படக் கூடிய மாற்று வழிமுறைகளில் அறவிடப் படுவதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.7 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 03 பொது வைப்புக் கணக்குகளில், 1150 சந்தர்ப்பங்களில் வைப்பிலிடப்பட்ட இரண்டு வருடங்களுக்கு மேல் காலாவதியான ரூபா 298,476,498 பெறுமதியுள்ள மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்பட்டிக்கவில்லை. அதில் ஒரு வைப்புக் கணக்கில் உள்ள ரூபா 20,651,041 ஆன வைப்புத் தொகை கம்பஹா மாவட்ட பிரதேச செயலகம் 11 க்கான காலவதியான 367 ஒப்பந்தங்களுக்கான நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தொகை ஆவதுடன் அம்மீதிகள் தொடர்பாகவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உடன்பாடு உண்டு.<br>பொது வைப்புக் கணக்கு மீதிகளை தீர்த்து வைப்பதற்காக சென்ற சில வருடங்களுக்குள் முறையான வேலைத் திட்டமொன்றினை தயாரிக்கப்பட்டு அதிகமான மீதிகளை தீர்த்து வைப்பதற்கு செயற்பட்டுள்ளமையினை அறியத் தருகின்றேன். அதேபோன்று நட்டஈடு செலுத்தல்களை தீர்த்து வைப்பதற்கான விசேட வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதுடன் அதிவேக பாதைகளுக்காக கையேற்றலுக்கான நட்டஈட்டுத் தொகை போதாது | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் வைப்பு மீதியினை தீர்த்து வைப்பதற்காக செயற்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | இருந்தமையினால் பெற்றுக் கொள்ளப்படாத அதிகளவு நட்டஈட்டுத் தொகை இத்தொகையினை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் அவ்வுடன்பாட்டினை பெறும் வரையில் சம்பந்தப்பட்ட நஷ்டஈட்டுத் தொகையினை வைப்புக் கணக்கில் தேக்கி வைக்க நேரும் மேலும் காணி சச்சரவுகள் நட்டஈடு பெறுநர் வெளிநாடு பயணித்தல் ஆகிய காரணங்களினால் இந்த நட்டஈடு தீர்த்து வைத்தல் தாமதப்பட நேரும் எவ்வாறாயினும் இந்த வைப்பு மீதிகளை 2021 ஆண்டினுள் இயலுமான வரையில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்காள்வேன். | |

**2.8 வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மகர பிரதேச செயலகத்தின் இலக்கம் 0007041718 கொண்ட வங்கிக் கணக்கு தொடர்பாக 2020 திசெம்பர் 31 திகதியாகும் போது ரூபா 19,447 பெறுமதியான 24 காசோலைகள் வசூலாகி இருக்காததுடன் அக்காசோலைகள் 2014 யூலை 14 ஆந் திகதி முதற்கொண்டு தொடர்ந்து வரும் பெறுமதியாக அவதானிக்கப்பட்டது. | மகர பிரதேச செயலகத்துடன் தொடர்புடைய, 2020 திசெம்பர் மாதத்தில் வசூலாகாத காசோலைகளின் பெறுமதியான ரூபா 17,206,056 முழுத் தொகையும் 2021.03.31 திகதி தீர்க்கப்பட்டிருந்தது. | இதுவரையிலும் தீர்க்கப்படாது உள்ள ரூபா 19,447 பெறுமதியான காசோலை களுக்கு கிடைக்க வேண்டிய தொகையினை பணமாகவே அறவிடப்பட வேண்டியமை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| களணி பிரதேச செயலகத்திற்கு சொந்தமான, 37 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவினுள், 27 உத்தியோகபூர்வ அலுவலகங்கள் | உத்தியோகபூர்வ செவன அலுவலகங்களுக்காக உள்நாட்டு அமைச்சின் ஊடாக ஒதுக்கித் தந்துள்ளன. | திட்டங்களை தயாரிக்கும் போது அதற்கான கவனம் |

| | | |
|---|---|---|
| நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் பிரதேச செயலகத்திற்கு சொந்தமான அரச காணிகள் அல்லது அன்பளிப்புக் காணிகள் இல்லாமையினால் நிர்மாணிக்கப்பட்ட உத்தியோகபூர்வ அலுவலகங்கள் 09 வரையறுக்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஒரு அலுவலகத்தில்2013 தொடக்கம் சுகாதார வசதிகள் மற்றும் தண்ணீர் வசதிகள் இல்லாதிருந்ததுடன் இன்னொரு அலுவலகம் 2018 வருடம் முதல் சுகாதார வசதிகளின்றி நடாத்தப்பட்டிருந்தது. அவ்வசதிகளை வழங்குவதற்கு மீளாய்வாண்டினுள்ளும் செயற்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீட்டு வரையறையினுள் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதுடன் அவ்வரையறையினுள் அதிகமான அலுவலகங்கள் பூர்த்தி செய்து கொண்டு நடாத்தப்படுகின்றன. தேவைப்பாடுகள் கண்டறிந்தவுடன் அவற்றினை பூர்த்தி செய்வதற்காக சகல ஒதுக்கீடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அரசுக்கு சொந்தமான காணிகளில் இந்த நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வாறான காணிகளை உபயோகப்படுத்த முடியுமாயின் அல்லது எவராவது ஒரு அன்பளிப்பாளர் ஏதாவது ஒரு காணியினை அன்பளிப்பு செய்யும் சந்தர்ப்பத்தில் அந்த நிர்மாணப் பணியினை மேற்கொள்ளப்படும். கம்பஹா மாவட்டத்தினுள் வரையறுக்கப்பட்ட அளவிலான அரச காணிகளை உபயோகப்படுத்தப்பட்டு இயலுமான வரையிலான நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | செலுத்தப்படு வதோடு ஏற்படக் கூடிய குறைபாடு களினை குறைத்துக் கொள்வதற்கு செயற்பட வேண்டியமை. |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு அளவினை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அத்தனகல்லை மற்றும் மீரிகம பிரதேச செயலகத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் படி ஆசியா அபிவிருத்தி வங்கி, நகர அபிவிருத்தி அதிகார சபை, பிரதேச செயலகங்கள் மற்றும் சனசமூக நீர் திட்டங்களின் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 47.37 மில்லியன் ஒதுக்கீட்டினை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட 11 நீர் திட்டங்கள் தற்போது செயல் இழந்த நிலைக்கு | திட்டங்களை பற்றி தேடிப் பார்த்து தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நீர்த் திட்டங்கள் செயலிழப் பதற்கான காரணிகள் சரி செய்யப்பட்டு மக்களுக்கு பயன்தரும் வகையில் திட்டங்கள் செயற்படுத்த வேண்டியமை |

| | | |
|---|---|---|
| தள்ளப்பட்டுள்ளன. அதன் காரணமாக அத்திட்டங்களினால் பயனடைந்த சுமார் 1257 பயன்பெறுநர் குடும்பங்கள் தண்ணீர் பெற்றுக்கொள்வதில் பலவித அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாகவும் இத்திட்டங்களை மறுசீரமைக்கப்பட்டு பயன் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | | |

## 3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 06 ஆந் திகதிய இலக்கம் 1/2019 கொண்ட நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி செயலாளரினால் வழங்கப்பட்ட சபிரிகமக் நிகழ்ச்சியின் கீழ் கிராம வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2020 இல் செயற்படத்தக்க கூடிய 09 களத்தினை அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தன. ஆய்விலும் களணி பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்பட்ட 71 திட்டங்களுள் சுமார் 67 திட்டங்களில் கிராமிய வீதிகள், படித்தட்டுக்கள், கால்வாய்கள், சிறுபாலங்கள், மற்றும் வீதியோர கால்வாய்கள் செய்தல் ஆகியன மீது மட்டும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அதேபோன்று திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்திற்காக 03 களத்தின் கீழ் 426 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. 2020 ஆம் ஆண்டிற்கான திட்டங்களை தெரிவு செய்யும் போது கிராமம் புற வீதி அபிவிருத்தி மீது கூடிய கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட 413 திட்டங்களில் நூற்றுக்கு 96 அக்களத்திற்கான திட்டங்களாக இருந்தன. அதன்படி பிரதேச | சப்ரிகம வேலைத்திட்டம் தொடர்பாக நிதி,பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் 2019 திசெம்பர் 06 ஆந் திகதி வழங்கப்பட்ட இலக்கம் 01/2019 கொண்ட அபிவிருத்தி சுற்றறிக்கையின் பிரகாரம் அபிவிருத்தி திட்டங்களை இனங்காணல் மற்றும் முன்னுரிமைப்படுத்தல் பிரதேச அரசியல் பிரதிநிதிகளின் மற்றும் பிரதேச ∴ கிராமிய அரச உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடனான கிராம சமூகத்தினர் சகிதமான கிராமிய குழு மூலம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கிராமிய குழுவினால் முன்னுரிமை செய்யப்பட்டு பரிந்துரை பெற்றுக் கொடுக்கப்பட்ட திட்டங்கள் இங்கு மேற்கொள்ளப்பட்டன. | பெறப்படும் ஒதுக்கீடுகள் மூலம் சுற்றறிக்கை ஆலோசனைக்கு அமைவாக மற்றும் மக்களுக்கு ஆகக்கூடிய சேவையினை பெற்றுக் கொள்ளக் கூடிய திட்டங்கள் தெரிவு செய்வதற்கு செயற்பட வேண்டியமை. |

செயலக அதிகார பிரதேசங்களில் இருக்கின்ற ஏனைய களங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு இதன் மூலம் தீர்வுக் காண பட்டிருக்கவில்லை என்பதனை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

## 3.4 திட்டங்கள் முடிக்கப்படாது கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டில் மினுவாங்கொடை பிரதேச செயலகப் பிரிவில் மினுவாங்கொடை நாலந்த ஆண்கள் பாடசாலையில் குழாய்க் கிணறொன்றினை நிர்மாணிக்கப்பட்டு நீர் சேமிக்கும் தொட்டியும் பொருத்தப்பட்டு குடி நீர் வழங்குவதற்காக ரூபா 1,000,000 மதிப்பீடு செய்யப்பட்டு திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு ரூபா 800,714 செலவிடப்பட்டதன் பின்னர் எதிர்பார்த்த பலன் கிட்டாமையினால் திட்டம் கைவிடப்பட்டது. | 2020 ஆம் ஆண்டினுள் அமுலாக்கப்பட்ட சில திட்டங்களை அமுல்செய்யும் போது வற்பட்ட பிரச்சினைகள் மற்றும் சில சங்கடமான நிலை காரணமாக கைவிட நேர்ந்தது. | பெற்றுக் கொள்ளப்படும் ஒதுக்கீடுகள் மூலம் மக்களுக்கு உச்ச கட்ட சேவையினை கிடைக்கும் படி திட்டங்களை முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டினுள் உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் மீரிகம, அத்தனகல்லை மற்றும் மஹர பிரதேச செயலகப் பிரிவுகளில், மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 2,150,000 க்கான 4 திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீரிகமை பிரதேச செயலகப் பிரிவினுள் உத்தியோகபூர்வ கட்டிட திட்ட 15 அலுவலகங்கள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 8 அலுவலகங்கள் மாத்திரம் | - மேற்படி - | - மேற்படி - |

முடிக்கப்பட்டு இருந்ததுடன் மிஞ்சிய 07 திட்டங்களுக்குமாக 2018 வருடம் ரூபா 1,433,909 செலவிடப்பட்டு நிர்மாணப் பணிகளை முடிப்பதற்காக 2020 இல்ரூபா 12,566,092 க்கான ஒதுக்கீடு பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒதுக்கீடு கிடைக்கப் பெறவில்லை.

## 3.5 செயற்திட்டத்தினை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 06 ஆந் திகதிய இலக்கம் 01/2019 கொண்ட அபிவிருத்தி சுற்றறிக்கை பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட சகல திட்டங்களையும் 2020 நவம்பர் 30 ஆந் திகதிக்கு முன் முடிக்கப்படுவதற்கான பொறுப்பினை மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் பொறுப்பேற்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும், 2020 வருடத்திற்காக கிராமிய வீதி அபிவிருத்தியின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்காக திவுலப்பிட்டிய பிரதேச சபையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 52,288,000 க்கான 95 திட்டங்கள் வருடத்தினுள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | 2020 சப்பிரி கமக் வேலைத்திட்டத்தின் கீழ் பிரதேச சபை அதிகாரத்தில் 413 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் 2020.12.31 இல் வேலை முடிக்கப்பட்ட 95 திட்டங்களை அமுல்படுத்தப்படாததற்கான காரணத்தினை விசாரித்து 2021 பெப்ரவரி 02 ஆந் திகதி பிரதேச சபைக்கு கடிதம் அனுப்பப்பட்டதுடன் இக்கடிதத்தின் படி வேலைகள் முடிக்கப்படாமைக்கான கீழுள்ள காரணங்கள் காட்டப்பட்டிருந்தன.<br>• நாட்டில் நிலவும் கொரோனா நிலைமை<br>• நாட்டு நிலைமை சீரானதன் பின்னர் மிஞ்சியுள்ள காலத்தினுள் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்களின் அளவு அதிகரித்தல்<br>• 2020.10.04-2020.11.09 வரையிலான அதிகார பிரதேசங்களை மீண்டும் ஒருமுறை மூடியமை.<br>• கடும் மழை | ஒப்பந்த காலத்தினுள் திட்டங்களை செய்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | • வீதி திட்டங்களை ஒப்பந்த முறையிலன்றி திணைக்கள முறையில் வழங்கப்படுதல். | |
| (ஆ) | சப்பிரி கமக் மக்கள் கிராம அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் 2020 வருடத்தினுள் நிறைவேற்றப்படாத ரூபா 33,100,000 க்கான 48 திட்டங்கள் 2021 வருடத்திற்கு தொடர் திட்டங்களாகதிட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2021 மார்ச 31 வரையிலும் சகல திட்டங்களையும் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | சப்பிரி கமக் தொடர் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடு கிடைத்துள்ளதுடன் அத்திட்டங்களை துரித கதியில் முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | ஒப்பந்த காலத்தினுள் திட்டங்களை செய்து முடிப்பதற்கு செயற்பட வேண்டியமை. |
| (இ) | ஜாஎல பிரதேச செயலகம் தற்போது செயற்படும் கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதனால், புதுக் கட்டம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ரூபா 165.34 மில்லியன் மதிப்பீட்டு தொகைக்கு கூடிய விரைவில் நிர்மாணித்து முடிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆனால் காணி தொடர்பாக எழுந்த பிரச்சினைகளால் ஏற்பட்ட காலதாமதத்தின் பின்னர் அஸ்திவாரத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக ரூபா 5,369,779 முற்பண தொகையினையும் செலுத்தியதன் பின் ஒப்பந்தப் பணியினை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது. பிறகு சுமார் ஒரு வருட காலத்திற்கு பின்னர் அந் நிறுவனத்தினாலேயே ரூபா 27 மில்லியன் செலவிடப்பட்டு அஸ்திவாரப் பகுதி | ஜாஎல பிரதேச செயலகத்தின் நிர்மாணப் பணியினை எக்ஸல் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் உள்நாட்டு விவகார அமைச்சினால் வேறொரு நிலத்தை தேர்ந்தெடுப்பதற்கு பின்னர் முயற்சி மேற்கொண்டதனால் நிர்மாணப் பணியில் சற்று தாமதம் நேரிட்ட போதிலும் அந்த நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்ட புதுக் காணியில் இப்பணியினை ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்பட்டது. முற்பண செலுத்தலுக்கான பிணை முறி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த துடன் இம்மாற்றத்தினை இட்டு எவ்வித மேலதிக முற்பணமும் செலுத்தப்படாததுடன் நிர்மாணப் பணிகள் செவ்வனே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பணவீக்க நிலைமையினை தவிர்த்துக் கொள்ளும் வகையில் ஒப்பந்த கால எல்லைக்குள் திட்டங்களை பூர்த்தி செய்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

நிர்மாணிக்கப்பட்டு ரூபா 145.33 பெறுமதியினைக்கு மிகுதியாக இருந்த பணிப் பகுதியை வேறு நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆயினும், நிர்மாணப் பணிகள் மேற்கொண்டு வரும் சமயத்தில் கூட ரூபா 60 மில்லியனை இலங்கை போக்குவரத்து சபைக்கு செலுத்தி காணியின் சட்டரீதியான உரிமையினைப் பெற்றுக் கொள்வதற்கு செயற்படாததுடன் நிலத்தின் அமைப்பு மற்றும் உரிமையினை மீது கவனம் செலுத்தப்படாமல் செயற்பட்டதன் காரணமாக இத்திட்டம் 2013 வருடம் முதல் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நிர்மாணித்து முடிப்பதற்கு இயலாது போயுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | களணி பிரதேச செயலாளர் பிரிவினுள் வருடா வருடம் அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்கு காரணிகளாக விளங்கும் வாய்க்கால் மற்றும் கால்வாய்களில் நீர் தடைப்படுதல், நீர் விரைந்து செல்லாமை மற்றும் வாய்க்காலையும் கால்வாய்களையும் நன்கு பராமரிக்காமை ஆகிய விடயங்களை இனங்காணப்பட்டிருந்தன. இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அவற்றிற்கான 18 திட்டங்களை இனங்காணப்பட்டு இருந்த போதிலும் மீளாய்வாண்டினுள் அத்திட்டங்களை அமுல் படுத்தியிருக்கவில்லை. | பிரதேச செயலகத்திற்கு உள்ள பொறுப்பாவது வெள்ளப் பெருக்கினது கட்டுப்படுத்துவதற்கு தேவையான திட்டங்களை இனங்கண்டு அவற்றினை அமுல்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களை அறிவுறுத்துவதாகும். அதன் படி சம்பந்தப்பட்ட தடைப்பட்டிருக்கும் கால்வாய்களை இனங்காணப்பட்டு சம்பந்தப்பட்ட வருடத்தினுள் இடர் முகாமைத்துவப் பிரிவினை அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன். | மக்களுக்கு ஆகக் கூடிய சேவையினை கிடைக்கும் வண்ணம் திட்டங்களை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப் படல் வேண்டும். |

## 3.6 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் படி மாவட்ட செயலகத்தின் வருடாந்த வரைபு செயலாற்றல் அறிக்கையினை நிதிக்கூற்றுடன் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி செயலாற்றல் அறிக்கையினை 150 நாட்களுக்குள் முன்வைக்கப்பட வேண்டியதுடன் அடிப்படை வரைபினை தற்போதைக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் இறுதி கணக்காய்வு அறிக்கை கிடைத்த பின்னர் அச்சிடப்பட்டு முன்வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அரச நிதி சுற்றறிக்கையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் பிரகாரம் வரைபு செயலாற்றல் அறிக்கையை முன்வைக்கப்பட வேண்டியமை. |

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 ஆம் ஆண்டு பிரதேச உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பரவலாக்கப்பட்ட வரவு செலவு திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட ரூபா 50 இலட்சம் தொகையினை செலவிடப்பட்டு களணிய பிரதேச செயலகத்தினால் திப்பிட்டிகொட சேவைக்கான உத்தியோகபூர்வ அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டது. அக்கட்டிடத்தில் கிராம சேவா உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாய உத்தியோகத்தர் ஆகிய சகல உத்தியோகத்தர்களும் கடமை புரிய வேண்டியிருந்த போதிலும் கட்டிடம் கட்டப்பட்டு 02 வருடங்களுக்கு | உடன்படுகின்றேன். | கட்டிடம் நிர்மாணிப்பதற்கு முன் அதன் உரிமையினை பற்றி கவனம் செலுத்தப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | மேலாகியும் அதனை பிரதேச சபைக்கு சொந்தமான நிலத்தில் நிர்மாணிக்கப்பட்ட மையினால் மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அவ்வுத்தியோகபூர்வ அலுவலகத்தில் கடமையாற்றுவதற்கு பிரதேச சபையினால் இடமளிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | 2017 வருடம் மீரிகமை பிரதேச செயலகத்தில் உத்தியோகபூர்வ அலுவலகங்கள் 11 கட்டப்பட்டுள்ளதுடன் இவை அனைத்தும் கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் போன்ற மக்களுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களின் பாவனைக்காக உபயோகப்படுத்தப்பட்ட போதிலும் இவ் அலுவலகங்களுக்கு தண்ணீர் மற்றும் மின்சார வசதிகள் இல்லாததுடன் இரண்டு அலுவலக உத்தியோகத்தர்களுக்கு இடமும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 வருடம் உத்தியோகபூர்வ செவன அலுவலகம் 11 நிர்மாணிப்பதற்கு ஒரு அலுவலகத்திற்காக ரூபா 2,000,000 க்கான ஒதுக்கீடு பெற்றுக் கொள்ளப்பட்டது. அதன் போது பொது நிர்வாக மற்றும் உள்விவகார அமைச்சினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த திட்டத்திற்கு அமைய மதிப்பீடு தயாரிக்கும் போது மேற்கொள்ளக் கூடிய வேலைப்பகுதியாக இருந்தது. கட்டிடத்தை நான்கு பிரிவுகளாக பிரிப்பது மற்றும் வெளி மலக்கூடம் ஒன்று நிர்மாணிப்பது மட்டும் ஆகும். மின்சாரம் மற்றும் நீர் தேவைப்பாடு தொடர்பாக பிரதேச செயலாளரினால் விண்ணப்பிக்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதனை ஒதுக்கீட்டு வரையறையினுள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | பெறப்பட்ட ஒதுக்கீடுகளின் மூலம் அதிகபட்ச சேவையைக் கருத்திற் கொண்டு திட்டங்களை முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 3.8 ஆதனப் பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனப் பொறி மற்றும் உபகரணங்கள் கணக்கிலிடும் போது கீழ் காணப்படும் குறைபாடுகள் வெளியாகின.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (ை) | மினுவாங்கொடை பிரதேச செயலகத்திற்கு சொந்தமான நிலத்திற்கான காணி உறுதி | இது பற்றி திறைசேரி கணக்கீட்டு பணிப்பாளர் அதிபதியுடன் நடாத்தப்பட்ட கூட்டங்களில் அடிக்கடி | சொத்துக்களை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடப் |

| | | | |
|---|---|---|---|
| | இல்லாமையினால் அதன் பெறுமதியினை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடப்பட்டு இருக்கவில்லை. அதேபோன்று பிரதேச செயலாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட உறுதியின் படி கட்டான பிரதேச செயலகக் கட்டிடத்திற்கு சொந்தமான நிலத்தினை ரூபா 15,000,000 க்கு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடப்பட்டு இருந்த போதிலும் அந்த நிலத்தின் உரிமையினை காணி மறுசீரமைப்பு அதிகார சபைக்கு உரிமையாக இருந்தது. பியகம பிரதேச செயலக கட்டிடத்திற்கு சொந்தமான நிலத்தின் பெறுமதி ரூபா 28,000,000 என கணக்கிலிடப்பட்டு இருந்த போதிலும் அந்த நிலத்தின் பெறுமதியினை மதிப்பிடப்பட்டு இருக்கவில்லை. | கலந்துரையாப்பட்டுள்ளதுடன் மினுவாங்கொடை பிரதேச செயலாளரினால் மதிப்பீட்டு திணைக்களத்திற்கு எழுத்து மூலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. காணி உறுதி தொடர்பாக உள்ள பிரச்சினையினால் மதிப்பீட்டு திணைக்களம் இம்மதிப்பீட்டினை மேற்கொள்ளவில்லை. இது தொடர்பாக மீண்டும் ஒரு முறை சம்பந்தப்பட்ட மதிப்பீட்டாளர்களுடன் கலந்துரையாடி 2021.12.31 முன்னர் சம்பந்தப்பட்ட அலுவலினை முடிவுக்கு கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பட்டதுடன் மற்றும் பிரதேச செயலகங் களுக்கு சொந்தமில்லாத சொத்துக்களை கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ை) | பிரதேச செயலகத்தின் மூலம் அல்லது பிரதேச செயலாளர் அதிகாரத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட திவுலப்பிட்டிய, வத்தளை, கட்டான, கம்பஹா, அத்தனகல்லை, ஜாஎல மற்றும் 97 உத்தியோகபூர்வ அலுவலகங்களின் கட்டிட பெறுமதியினை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடப்பட்டு இருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ அலுவலகங்களின் கட்டிடங்களை மதிப்பீடு செய்யும் போது அந்த நிலங்களினது உரிமைகள் பற்றிய பிரச்சினையினால் மதிப்பீடு மேற்கொள்வதற்கு முடியாது உள்ளதாக அறியத் தருகின்றேன். உறுதியாக மாவட்ட செயலாளருக்கு உரிமை இல்லாத நடைமுறை இல்லாத சொத்துக்களை கணக்கிலிடுவது பிரச்சினைக்குரியதாக இருப்பதனால் இது தொடர்பாக திறைசேரி கணக்குப் பணிப்பாளர் அதிபதியுடன் கலந்துரையாடி பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்றினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். | உரிமையினை கையேற்பதற்கு செயற்பட வேண்டியமை. |

## 3.9 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மினுவாங்கொடை பிரதேச செயலகத்திற்கு உரித்தான இலக்கம்251-3437 கொண்ட கெப் வாகனத்திற்கு 1999 வருடம் யூலை மாதம் நேர்ந்த விபத்து காரணமாக காப்புறுதி மூலம் அறவிடப்பட முடியாத இழப்பு ரூபா 189,360 ஆகும். அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப அறிக்கையின் பரிந்துரைப்படி விபத்து நேருவதற்கு காரணமாக இருந்த சாரதி பொறுப்பு ஏற்க வேண்டி இருந்தது. அதன்படி சம்பந்தப்பட்ட சாரதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 சனவரி 22 ஆந் திகதி வரையிலும் அவ்வழக்கினை முன்னெடுத்து செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் அதற்கான இழப்பினை அறவிடப்பட முடியாது போய் இருந்தது. | உடன்படுகின்றேன். | இழப்பினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

## 3.10 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்தினால் பராமரிக்கப்பட்ட வள நேர் கோடு தகவல்களின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட எண்ணிக்கையின் படி திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவினுள் வாழும் குழும்பங்களின் எண்ணிக்கை 43,518 ஆவதுடன் அக்குடும்பங்களில் அனுமதியில்லா வீடுகளில் வாழும் 279 குடும்பங்களும், தற்காலிக வீடுகள் 504, மலசலகூட | வீடு, நிர்மாணப் பணி மற்றும் கட்டிடப்பொருள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்காக “உங்களுக்கு ஒரு வீடு நாட்டுக்கு நாளை” கருப் பொருளின் கீழ் திவுலப்பிட்டிய பிரிவில் ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு | குறைந்த பட்ச வசதிகள் இல்லாது வாழ்பவர்களை மேம்படுத்துவ தற்காக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| வசதிகள் அற்ற 530, செல்லக்கூடிய பாதை வசதியற்ற 269, பொதுக்குழாயினை பாவனை செய்யும் 266, மின்சாரம் இல்லாத வீடுகள் 372 சகிதம் குறைந்த வசதிகள் கூட இல்லாது வாழும் ஏராளமானோர் இருப்பதனை அவதானிக்கப்பட்டது. | ஒரு வீடு வீதம் 122 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் 122 வீடுகள் நிர்மாணிக்கும் திட்டம் செயற்படுத்தப்படும். மலசல கூட வசதிகள் இல்லாதவர்களுக்காக பல்வேறு வேலைத் திட்டங்களின் கீழ் உதவிகள் பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டினை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 123 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளுக்கும் நீரினை பெற்றுக் கொள்ளக் கூடியதான திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. பாதை வசதிகள் இல்லாதவர்களுக்காக 01 இலட்சம் கி.மீ பாதைகளை நிர்மாணிக்கும் திட்டத்தின் ஐ ரோட் திட்டத்தினை பாதை அபிவிருத்தி அதிகார சபை அபிவிருத்தி அதிகார சபை, 2021 வருடம் செயற்படுத்தப்படுவதுடன் திவுலப்பிட்டிய பிரதேச சபை மூலமாகவும் கிராமிய பாதை திட்டங்கள் செயற்படுத்தப்படும். மின்சார வசதி இல்லாத சகல குடும்பங்களுக்கும் மின்சார அமைச்சு மூலம் ஏப்ரல் மாதம் மின்சாரம் வழங்கும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. | |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வு வருடம் அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழாமில் 487 வெற்றிடங்கள் நிலவியதுடன் அவ் வெற்றிடங்களை உரிய முறையில் நிரப்புவதற்கு அது தொடர்பாக அதிகாரமுள்ள சம்பந்தப்பட்ட | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 04/2017 படி ஒவ்வொரு நான்கு மாத இடைவெளி இறுதியில் பணிக்குழாமைப் பற்றிய அறிக்கையினை மெய் நிகர் முறையில் முகாமைத்துவ | சம்பந்தப்பட்ட அத்தியாவசிய மான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | |
|---|---|
| அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்கள் செயற்பட்டிருக்கவில்லை. | சேவைக்கான திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டது. வெற்றிடங்களாக உள்ள பதவிகளுக்காக அதிகாரிகளை இணைக்கும் படி உள்நாட்டு விவகார இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதனை அறியத் தருகின்றேன். அதன்படி எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட ஆட்சேர்ப்பினை மேற்கொண்டதன் பின்னர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான வெற்றிட பதவிகளுக்காக புது அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் என்னிடம் இல்லை என்பதனை மேலும் அறியத் தருகின்றேன். |